மாலை முரசு
பக்கங்கள் 14+3
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 02 வெள்ளிக்கிழமை 14.02.2025 | அதிர்வு 198

## வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி வேலையில்லாப் பட்டதாரிகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்




# யாழ். பல்கலை துணைவேந்தர், கலைப்பீடாதிபதி உள்ளிட்டோருக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

### சட்டத்துறை மாணவன் சார்பில் சட்டத்தரணி குருபரன் தாக்கல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் 4ஆம் வருட சட்டத்துறை மாணவன்

02

### உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின்

# 2 ஷரத்துகளை நிறைவேற்ற 2/3 பெரும்பான்மை தேவை

### உயர் நீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்றில் சபாநாயகரால் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டு வாசகங்கள் அரசமைப்பின் சில ஏற்பாடுகளுக்கு முரணாகக் காணப்படுவதால் அவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு என்ற விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அத்துடன் சட்டமூலத்தின் ஏனைய வாசகங்களை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாடாளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை காலை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் விசேடமாகக் கூடியது.

03



# விகாரை இடிப்பு பிரசுர விவகாரம்: கஜேந்திரகுமார் எம்.பிக்குப் பிணை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை இடிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குப் பிணை வழங்கப்பட்டது.

02

# தேசிய மக்கள் சக்தி எம்.பி. பைசாலின் வாகனம் மோதி ஒருவர் பரிதாபச் சாவு



**(எம்.எச்.எம். சியாஜ்)**

கொஸ்வத்த, ஹால்தடுவன பிர தேசத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசாலின் சகோதரரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மொஹம்மட் பைசால் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக வந்து கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பய ணித்த கார் வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்றபோது குறித்த காரை நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் செலுத்தி வந்துள்ள நிலை யில், கொஸ்வத்தை பொலிஸார் அவ ரைக் கைது செய்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**விகாரை இடிப்பு...**

தையிட்டி திஸ்ஸ விகாரையை இடித்து அகற்ற சமூக ஊடகங்களில் துண்டுப் பிரசுரத்தைப் பரப்பினார் என்ற குற்றச் சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலத்துக்கு மல்லா கம் நீதிவான் நீதிமன்றத்தால் அழைப் புக் கட்டளை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில்

ஆஜரான நாடாளுமன்ற உறுப்பினரை ஓர் இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கை ஜூன் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி மகிந்தன் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை இடிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊட கங்களில் கஜேந்திரகுமார் பொன் னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாக பலாலி பொலிஸார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது குற்றஞ்சாட்டி வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த துண்டுப்பிர சுரம் சமூக வலைத்தளங்களில் பரப்ப ப்பட்ட நிலையில் அது போலியானது எனத் தெரிவித்து ஊடகச் சந்திப்பொன் றில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெளிவுபடுத்தியதுடன் தனது சமூக வலைத்தளங்களிலும் போலிச் செய்தி எனக் குறிப்பிட்டு பகிர்ந்திருந்தார்.

**யாழ். பல்கலை...**

சி.சிவகஜன் என்பவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சட்டத்துறை மாணவன் சிவகஜனுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. இந்த வகுப்புத் தடை யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதி எஸ்.ரகுராம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விதிக்கப் பட்டுள்ளது என்று துணைவேந்தரால் மாணவனுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வகுப்புத் தடையைச் சவாலுக் குட்படுத்தியே சட்டத்துறை மாணவன் சிவகஜனால் இந்த மனுத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

தன்மீது பாரதூரமான அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு சிவகஜன் செவ்வி வழங்கினார் என்று பேராசிரியர் ரகுராம் துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு, பேராசிரியர் எஸ்.ரகுராம் கலைப்பீடாதிபதி பதவி யில் இருந்து விலகுவதாக அறிவித்த மறுநாளே வழங்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

கலைப்பீடத்தில் பாடத் தெரிவில் வெளிப்படையான ஒரு முறைமை கடைப் பிடிக்கப்படவில்லை என்பது தொடர்பில் வட்ஸ் அப் செயலியில் கருத்துத் தெரி வித்த மாணவர்களுக்கு எதிராக எடுக்கப் பட்ட நடவடிக்கையாகும். இந்த விடயத் தில் முறைப்படி அமைக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணைக் குழு, இரு மாணவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றை வழங்குவது என்று மட்டுமே தீர்மானித் திருந்தது. ஆனால், கலைப்பீடாதிபதி யின் வலியுறுத்தலுக்கு அமைய ஒரு வருடத்துக்கு மாணவ நிலையிலிருந்து அவர்களை இடைநிறுத்தும் தண்டனை வழங்கப்பட்டது.

அதேவேளை, விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவராலும், துணைத் தலைவராலும் மாணவர்கள் பூட்டை உடைத்தது தொடர்பானது. பலமுறை கூறியும் அந்தப் பூட்டுத் திறக்கப்படாததால் பூட்டை உடைத்த குற்றச்சாட்டுக்காக அவர்களுக்கும் வகுப்புத் தடை தண்டனை வழங்கப்பட்டிருந்து.

அத்துடன் பரமேஸ்வரன் ஆலயத் துக்கு அண்மையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட பதற்ற நிலைமை தொடர் பானது. இந்த விடயத்தில் முறைப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, ஒரு மாணவனுக்கு எதிராக மட்டும் மதுபோதை யில் இருந்தார் என்று தெரிவித்து ஒரு வருடம் மாணவ நிலையில் இருந்து இடை நிறுத்த வேண்டும் என்று முன்மொழிந் திருந்தது. ஆனால், போராசிரியர் ரகுரா மின் அழுத்தத்தின் அடிப்படையில் ஒழுக் காற்று சபை 5 மாணவர்களுக்கு எதிராக வும் ஒரு வருட இடைநிறுத்த தண்டனையை வழங்கியது.

குறித்த மூன்று விடயங்களும் யாழ். பல்கலைக்கழ மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக அண்மைக்காலம்வரை செயலாற்றிய சி.சிவகஜனால் விமர்சனத் துக்கு உட்படுத்தப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வேலையில்லா...**

இன்று 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போதே மாவட்ட செயலகத்துக்கு முன்னால் பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.









**2 ஷரத்துகளை...**

இதன்போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் சபைக்கு வருமாறு அறிவித்தார்.

அரசமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டு மூன்று நீதியரசர்கள் கொண்ட குழாமின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 'உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்' தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபைக்கு அறிவிக்கிறேன்.

சட்டமூலம் முழுமையாகவும், மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசமைப்பின் 84 (2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசமைப்புடன் முரண்படவில்லையென்பதால் அதனைப் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும் என தீர்ப்பளித்துள்ளார். – என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்தின் பொழிப்பினை வாசித்து சபாநாயகர் நிறைவு செய்தார்.

அத்துடன் உயர் நீதிமன்றத்தின் முழுமையான தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்கெடுப்பு நிதி நெருக்கடி மற்றும் இதர காரணிகளால் பிற்போடப்பட்டது. இவ்வாறான நிலையில் சிவில் அமைப்பினர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகள் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்தன.

இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் 'உள்ளூராட்சி தேர்தல்கள் பிற்போடப்பட்டதால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே வெகுவிரைவில் தேர்தலை நடத்துமாறு' உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வாறான பின்னணியில் ஏற்றுக் கொண்ட வேட்புமனுக்களுக்கு அமைய தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுவதாக அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தின. நடைமுறை விடயங்களை கருத்தில்கொண்டு ஏற்றுக்கொண்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கு அரசு தீர்மானித்து, அதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தைச் சமர்ப்பித்தது.

இந்தச் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் இன்றையதினம் சபைக்கு அறிவித்தார். சட்டமூலத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

# யாழ். மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், யாழ். மாவட்ட அரசஅதிபர் மருதலிங்கம் பிரதீபன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வழமையான தந்திரம்

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தில் இருந்து நிதி பெற்றார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு குறித்து பிரதமர் நாட்டுக்கு உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்திருக்கின்றார். அக்கட்சியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் கோரியிருக்கின்றார்.

தங்களது சிறிலங்கா பொதுஜன பெரமுன அதிகாரத்தில் இருந்த போதும், இல்லாத போதும் தேசியத்தையும், பௌத்த மதத்தையும் முன்னிலைப்படுத்தி செயற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியிலிருந்து வெளியேறியதன் பின்னர் அந்த கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை முழுமையாகத் தாங்கள் செயற்படுத்தியுள்ளார்கள் என்றும் கூறியிருக்கின்றார்.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் அரசாங்கங்களை மாற்றுவதற்கும், தேர்தல் செயற்பாடுகளுக்கும் யு.எஸ்.எய்ட் நிறுவனம் நிதியளித்துள்ளதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் உத்தியோகபூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு அறகலய போராட்டத்தின் போது இந்த நிறுவனம் நேரடியாகவும், மறைமுகமாகவும் போராட்டக்காரர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த நிறுவனத்தில் இருந்து நிதி பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் அந்த நிதி பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ சபாநாயகரிடம் எழுத்துமூலமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தற்போது குறிப்பிட்ட விடயங்களை நாங்கள் கடந்த காலங்களில் குறிப்பிட்டோம் என்று கூறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த, இதனால் நாங்கள் முன்னர் இனவாதிகளாகவும், மதவாதிகளாகவும் ஒருதரப்பினரால் சித்திரிக்கப்பட்டோம் எனவும் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்திடமிருந்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர மற்றும் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நிதி பெற்றுள்ளனர் என சமூக வலைத்தளங்கள் ஊடாக இப்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என அவர் சுட்டுகின்றார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து நாட்டின் இரண்டாவது உயர் பிரஜையான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாட்டுக்கு உண்மையைக் குறிப்பிட வேண்டும். பிரதமர் கடந்த காலங்களில் சமஷ்டியாட்சி அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அத்துடன் பௌத்த மதம், பாலினம் விவகாரத்தில் அவர் முற்போக்கான நிலைப்பாட்டையே கொண்டுள்ளார். ஆகவே இவ்விடயங்கள் குறித்து பிரதமர் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்கிறார் இந்திக அனுருத்த.

போட்டுக் கொடுத்து வாங்க முயற்சிக்கின்றார் அவர் என்பது தெளிவாகின்றது. சமஷ்டி தொடர்பாக தமிழர்களுக்கு ஆதரவாகவோ அல்லது பௌத்த மதம் மற்றும் பாலின விவகாரம் போன்றவற்றில் வெளிப்படையான கருத்தை அவர் வெளியிட்டால் அதை வைத்தே பௌத்த - சிங்கள பேரினவாதத்தை உசுப்பி விட்டு, சிங்கள மக்களை திசை திருப்பி, அரசியல் ஆதாயம் தேடலாம் என்று சிறிலங்கா பொதுஜன முன்னணி எதிர்பார்க்கின்றது. அதன் வெளிப்பாடு தான் இந்தக் கருத்துக்கள்.

இனவாதத்தைக் கிளப்பி அரசியல் செய்யும் மொட்டுக் கட்சியின் வழமையான - கீழ்த்தரமான - தந்திரத்தின் வெளிப்பாடுதான் இந்தக் கருத்தியல்.





# அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. வேண்டுகோள்

(றிபாஸ்)

அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் எதிர்நோக்கும் கல்வி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, சமூக சேவை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் முன்மொழிவுகளைச் செய்து, இவ்வாறான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (11) அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் அரச அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மேலும் பல கோரிக்கைகளை இங்கு முன்வைத்தார்.

நிந்தவூர் பிரதேச கலாசார மண்டப நிர்மாணம், வீதி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, பாலம் அமைத்தல் போன்றவையும், சாய்ந்தமருது பிரதேச மையவாடி, மீனவர்களின் பிரச்சினைகள், மாவடிப்பள்ளி பாடசாலை அபிவிருத்தி, விவசாயிகளின் பிரச்சினைகள், சம்மாந்துறை பஸ் தரிப்பிடத்தை மீண்டும் செயற்படுத்தல், அட்டாளைச்சேனை வீதிகள், வடிகான்கள் அமைத்தல், நாவிதன்வெளி மையவாடி, பொது விளையாட்டு மைதான புனர்நிர்மானம், போன்ற பல முன்மொழிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரால் முன்மொழியப்பட்டன.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் கற்பகத்தின் கிளைகள் திறக்கப்படும்

## பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் பிரதீப் உறுதியளிப்பு

(த.சுபேசன்)

நாட்டினுடைய சகல மாவட்டங்களிலும் கற்பகத்தின் கிளைகள் திறக்கப்படும் என பெருந்தோட்ட பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் யாழில் உறுதியளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தொழிற்துறை திணைக்களம் மற்றும் பனை அபிவிருத்திச்சபை ஆகியன இணைந்து திறந்து வைத்த “கற்பகம்” பனை சார் உள்ளூர் உற்பத்தி நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதே தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாக இருந்தது.

விசேடமாகப் பனை சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்வதன் ஊடாக வடமாகாண மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்.



பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக தெரிவாகியுள்ள சகாதேவன் முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறார்.

பனை சார்ந்த உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் ஊடாக இதுவரை செயற்படுத்தப்படாத அபிவிருத்திகளை இயன்றவரை வடக்கு மாகாணத்தில் செயற்படுத்துவோம்.

பனை சார்ந்த உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையமான கற்பகத்தை சகல மாவட்டங்களிலும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனூடாக வெளி மாவட்ட மக்களுக்கும் பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களை அறிமுகம்செய்ய முடியும்.- என்றார்.

# சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நிர்வாக கட்டடத்தின் திறப்பு விழா!





(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நிர்வாக கட்டடத் திறப்பு விழா இன்று (14) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி.கருணாகரன் தலைமையில் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ட்ரொட்ஸ்கி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பொறியியலாளர் எஸ். ஏ. கே.சுபசிங்க, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் பணிப்பாளர பொறியியலாளர் பி.எஸ்.சி.கே முணசிங்க, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் பிரதம பொறியியலாளர் டீ.சஞ்ஜீவன் மற்றும் விசேட அதிதிகளாக கல்முனை மேல் நீதிமன்ற பதிவாளர் எஸ்.எச்.எஸ். ஹக்கீமுள்ளாஹ், கல்முனை மேல் நீதிமன்ற வலயக் கணக்காளர் ஏ.எல். நஜிமுடீன், மேல் நீதிமன்ற தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். றிப்கான் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# தலவாக்கலை கதிரேசன் ஆலய திருவிழா!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்த தைப்பூச திருவிழாவின் 10 ஆம் நாள் சித்திரை முத்தேர் பவனியும் 12 ஆம் நாள் பால் குட பவனியும் காவடியாட்டமும் நடைபெற்றன.





# ‘எந்நாட்டவர்க்கும் இறைவன்’ நூல் அறிமுக விழா நாளை!

(அபு அலா )

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி (கவிஞர் பாரதி பாலன்) எழுதிய திருவாதவூரர் மாணிக்கவாசகர் தம் “எந்நாட்டவர்க்கும் இறைவன்” நூல் அறிமுக விழா நாளை (15) திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு கிழக்கு மாகாணம் ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளியம்மாள் தேவஸ்தான குரு பிரம்ம ஸ்ரீ சோ.ரவிச்சந்திர குருக்கள் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு நோயேல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம், கிழக்கு பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் அறம் கூறும் மாணிக்க மாணிக்கவாசகர் அருட்பணி அ.அ.நவரெத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த விழாவில் சல்லியம்பாள் மகா வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும் இடம்பெறவுள்ளது.




தலைமை உரை மற்றும் வரவேற்பு உரையை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தனும், நூல் அறிமுக உரையை திருமதி சௌ.சந்திரகலாவும் நிகழ்த்தவுள்ளனர்.





# வடமேல் மாகாண ஆளுநரின் மக்கள் சந்திப்பு புத்தளத்தில்!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரியவின் மக்கள் சந்திப்பு புத்த ளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களின் பங்குபற்றுதலோடு புத்தளம் நகரில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜே. எம். பைசலோடு ஒன்றிணைந்து சில முக்கியமான விடயங்களை ஆளு நரின் கவனத்துக்குக் கொண்டு வந்து தீர்வுகள் பெறப்பட்டுள்ளது.

மன்னார் வீதி, புத்தளம் பிரதேச சபை மற்றும் நகர சபை எல்லைக்கு உட்பட்ட வெள்ள நீர் வெளியேற்றும் கால்வாய்களுக்கு மேலால் உள்ள சட்ட விரோத கட்டுமானங்களை நீக்கக் கோரப்பட்டது. இதன்போது அதற்கான பணிப்புரைகளை இரண்டு செய லாளர்களுக்கும் ஆளுநர் வழங்கினார்.

பாத்திமா கல்லூரிக்கு அண்மையில் உள்ள நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான காணியைக் கல்லூரியின் விஸ்தரிப்புக்காக விடுவிக்கக் கோரி கல்லூரி அதிபரின் வேண்டுகோள் ஆளுநருக்கு முன்வைக்கப்பட்டது. இதற்கான தீர்வை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் ஊடாக வழங்க ஆளு நர் அறிவுறுத்தினார்.

புத்தளம் விஞ்ஞான கல்லூரியின் அதிபர், கல்லூரியில் வெற்றிடமாகவுள்ள ஆசிரியர் நியமனங்களை வழங்குமா றும் கோரிக்கை விடுத்தார். அதற்கு அமைய உடனடியாக மாகாண கல்வி பணிப்பாளருக்கு விடயங்களை ஆளு நர் எடுத்துரைத்தார்.

சேதமடைந்த வீதிகளால் மழைக் காலத்தில் மக்கள் அவதியுறும் நிலை மைகளை ஆளுநருக்கு எடுத்துக்காட்டி, அவசரமாகச் சீர் செய்யக் கூடிய தார் பாதைகளை இடைநடுவே கைவிடப்பட்டுள்ள பாதை நிர்மாணங்களையும் செய்து தருமாறு வேண்டப்பட்டது. அதற்கு அமைய அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை உள்ளூ ராட்சி ஆணையாளர் ஊடாக வழங் குவதற்கு ஆளுநர் பணிபுரை வழங் கினார்.

எதிர்வரும் காலங்களில் மாதாந்தம் ஆளுநரின் சந்திப்பு புத்தளத்தில் இடம்பெறும் எனவும் மக்கள் குறைகள், பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்வதற்கும் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர அணியினர் தயாராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.





# பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான நடமாடும் சேவை நிந்தவூரில்!

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து மனித அபிவிருத்தி ஸ்தாபனம் பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவையைப் பிரதேச செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்தியது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப் பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வீ.ரீ.ஹசீனா, மனித அபிவிருத்தி ஸ்தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அம்பாறை மாவட்ட அலுவலக அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரச அதிகாரிகளும் கலந்துகொண்ட னர்.

இதன்போது நடமாடும் சேவைக்கு வருகைதந்த பொது மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டன. முறைப் பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# மட்டு. மண்முனை மேற்கு பிரதேச பொங்கல் விழா

(எஸ். சதீஸ்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை (14) காஞ்சரங்குடா மாணிக்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடை பெற்றது.

கலாசார திணைக்களப் பிரிவின் ஒழுங்கமைப்பில், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் காஞ்சிரங்குடா கிராம பொது அமைப்புக்களும் இணைந்து, இந்தப் பொங்கல் விழாவை நடத்தினர்.

பாரம்பரிய முறைப்படி வயலில் நெல் அறுவடை இடம்பெற்று, விஷேட பூசை வழிபாடுகளுடன் பொங்கல் இடம் பெற்றது. இதன் போது ஆலய முன்றிலில் பாரம் பரிய சம்பிரதாய முறையில் கரகம், கூத்து, வயல் அறுவடை பாடல் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.











# கற்கோவளம் பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலை அதிபர் ஜெயமோகன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டில் இந்த பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களின் நவீன கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக இந்த திறன் வகுப்பறையானது வழங்கி வைக்கப்பட்டது.

விசன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் நிறுவனத்தின் "இளையோர் கனவு மெய்படல்" திட்டத்தின் மூலம் இப் பாடசாலையில் வாழ்க்கைத் திறன் அமர்வுகள், தலைமைத்துவ பயிற்சிகள், சமூக செயற்பாட்டுத் திட்டங்கள் என்பன இப்பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் ஸ்தாபகர் இரட்ணம் நித்தியானந்தன் மற்றும் அவரது பாரியாரால் வைபவ ரீதியாக தொடங்கி வைக்கப்பட்ட இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த க. சத்தியபாலன், விசன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அ. மயூரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.




பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் திறன் பலகையை பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முன்னோட்ட நிகழ்வும் நடத்தப்பட்டது.

மாணவர்களது கல்வியில், தொலைபேசி மற்றும் போதைவஸ்து போன்றவை அதிகம் பாதிப்பை ஏற்படுத்தும் இக்காலத்தில், மாணவர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என இரட்ணம் நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

அதே நேரத்தில், திறன் வகுப்பறையின் பயன்பாடானது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தொடக்கம் க.பொ.த. சாதாரண தர மாணவர்கள்வரை அனைவரதும் கல்விக்கு வினைதிறனான தொடர்ச்சியான உந்துதலாக காணப்படும் எனவும், இவ்வாறான உதவிகள் மாணவர்களையும் சமுதாயத்தினரையும் உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த திறன் வகுப்பறையை வழங்கிய இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் நிறுவனங்களுக்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.

தொடர்ந்து, இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட சிறுவர் முற்றத்தை இரட்ணம் பவுண்டேஷனின் நிதி அனுசரணையில், விசன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் நிறுவனமானது புனரமைத்து பாடசாலையிடம் கையளித்தது.









# உடப்பு கடற்கரைப் பிரதேசம் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தில்!

(க.மகாதேவன்)

கிளீன் ஸ்ரீ லங்கா சிறந்த பண்பான வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டத்தில் உடப்பு கடற்கரைப் பிரதேசம் இன்று (14) வெள்ளிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. எழில் மிகு கடற்கரைப் பிரதேசம் கவர்ச்சிகர மான சுற்றுலாப் பயணம் என்ற தொனிப் பொருளில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முந்தல் பிரதேச செயலாளர் தலைமையில், மத்திய சுற்றாடல் அதிகார சபையினர், உடப்பு பொலிஸார், உடப்பிலுள்ள மீன்பிடிச் சங்கத்தினர், உடப்பு தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், இந்து ஆலய பரிபால சபையினர், பெற்றோர்கள் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் மூலம் பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.









# பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் ‘மெட்டுப்போடு’ நூல் வெளியீட்டு விழா

பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் “மெட்டுப்போடு” நூல் வெளியீடு பாலமுனை அமீர் மண்டபத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ. எல்.ஏ.அஸீஸ் தலைமையில் கடந்த புதன்கிழமை (12) இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகநாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கெ. இப்னு அஸார், கணக்காளர் எம்.எப்.பர்ஹான் மற்றும் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், தென் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம். எம்.ஹனீபா, விரிவுரையாளர் அப்துல் றசாக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகளும் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதிக்கு நூலாசிரியர் பாலமுனை பாறூக் நூல் வழங்கி வெளியிட்டு வைத்தார்.





# டொனால்ட் ட்ரம்புடன் பிரதமர் மோடி சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று அதிகாலை சந்தித்துப் பேசினார். அப்போது பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக இரு தலைவர்களும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரான்ஸ் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் அமெரிக்காவுக்கு சென்றார். தலைநகர் வொஷிங்டனில் உள்ள விமானப் படை தளத்தில் தரையிறங்கிய அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதிகாலை நேரத்தில் கடும் குளிரை பொருட்படுத்தாமல் இந்திய வம்சாவளியினர் திரண்டு வந்து அவரை உற்சாகமாக வரவேற்றனர். அங்கிருந்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில் உள்ள விருந்தினர் இல்லமான பிளேர் ஹவுஸுக்கு பிரதமர் மோடி காரில் சென்றார். உலகின் முக்கிய தலைவர்கள் மட்டுமே பிளேர் ஹவுஸில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அமெரிக்க நேரப்படி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு (இலங்கை நேரப்படி வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி ) ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசியுள்ளார்.

இருவரும் பரஸ்பரம் கைகுலுக்கி, கட்டியணைத்து ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து விட்டு, 45 நிமிடங்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

குறிப்பாக பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய உளவு துறை இயக்குநர் துளசி கப்பார்டு, பிரதமர் நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசினார். சி.ஐ.ஏ, என்.எஸ்.ஏ உட்பட அமெரிக்காவின் 18 புலனாய்வு அமைப்புகள் துளசியின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. பகவத் கீதையால் ஈர்க்கப்பட்ட இவர் சிறுவயது முதலே இந்து மதத்தை பின்பற்றி வருகிறார். பிரதமர் மோடி, துளசி சந்திப்பின்போது தீவிரவாத ஒழிப்பு, சைபர் பாதுகாப்பு குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

அமெரிக்க நேரப்படி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு (இலங்கை நேரப்படி இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி ) ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். இருவரும் பரஸ்பரம் கைகுலுக்கி, கட்டியணைத்து ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து விட்டு, 45 நிமிடங்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். குறிப்பாக பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் குறிப்பிடுகையில், கடந்த ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய அதிபராக ட்ரம்ப் பதவியேற்றார். இதன்பிறகு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா, ஜோர்டான் மன்னர் அப்துல்லா ஆகியோர் மட்டுமே ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்துப் பேசி உள்ளனர்.

இதில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவும் ஜோர்டான் மன்னர் அப்துல்லாவும் பாலஸ்தீன பிரச்சினை தொடர்பாக சந்தித்து பேசினர். ஜப்பான் பிரதமர் இஷிபா, சீனாவால் எழுந்துள்ள பாதுகாப்பு, வர்த்தக சவால்கள் குறித்து ட்ரம்புடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த சூழலில் ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்த 4 ஆவது உலக தலைவர் என்ற பெருமையை பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார். இந்த சந்திப்பின்போது பாதுகாப்பு, வர்த்தகம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கடந்த 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு 77.5 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன. இதே காலகட்டத்தில் அமெரிக்காவில் இருந்து 42.2 பில்லியன் டொலர் மதிப்பு பொருள்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு இருக்கிறது. இந்த வர்த்தக பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அமெரிக்க பொருள்கள் மீதான வரிகளை குறைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தினார்.

சீன பொருள்கள் மீதான வரியை ஜனாதிபதி ட்ரம்ப் உயர்த்தி உள்ளார். இதன்காரணமாக அமெரிக்காவில் இந்திய பொருள்களின் விற்பனை கணிசமாக அதிகரிக்கும். அதேநேரம் இந்தியாவில் அமெரிக்க பொருள்களின் இறக்குமதியும் கணிசமாக அதிகரிக்கும். அமெரிக்க தொழிலதிபர் எலன் மஸ்க் தனது டெல்சா காரை இந்தியாவில் விற்பனை செய்ய நீண்ட காலமாக முயற்சி செய்து வருகிறார். இதை மத்திய அரசு சொகுசு காராக கருதி அதிக வரியை விதிக்க முடிவு செய்தது. ஆனால், டெல்சா காரை மின்சார வாகனமாக கருதி சலுகை அளிக்க வேண்டும் என்று எலன் மஸ்க் வலியுறுத்தி வருகிறார். பிரதமர் மோடி, ஜனாதிபதி ட்ரம்ப் சந்திப்பின்போது இந்த விவகாரம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

சீனாவின் அச்சுறுத்தலை சமாளிக்க அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய 4 நாடுகள் ஒன்றிணைந்து குவாட் அமைப்பை உருவாக்கி உள்ளன. இந்த கூட்டமைப்பை வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதி மேற்கொண்டனர். இந்திய, பசிபிக் பிராந்திய கடல் பகுதியில் கூட்டாக ரோந்து பணியை மேற்கொள்வது குறித்து ட்ரம்பும், மோடியும் முக்கிய ஆலோசனை நடத்தினர். இராணுவ, வர்த்தகரீதியாக சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவது குறித்து பல்வேறு வியூகங்கள் வகுக்கப்பட்டன. அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை திரும்ப அழைத்து கொள்வது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன், காசா போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகிறார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பிரதமர் மோடிக்கு மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இதன்படி உக்ரைன் போர், காசா போருக்கு தீர்வு காண்பது தொடர்பாகவும் ட்ரம்பும் மோடியும் முக்கிய ஆலோசனை நடத்தினர் என தெரிகிறது.

கடந்த காலங்களில் இந்தியா குறித்து டொனால்ட் ட்ரம்ப் சில எதிர்மறையான கருத்துகளை கூறியிருக்கிறார். ஆனால் பிரதமர் நரேந்திர மோடியை அவர் ஒருபோதும் விமர்சித்தது கிடையாது. தனிப்பட்ட முறையில் இருவருக்கும் இடையே மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இது இரு நாடுகள் இடையிலான உறவை மேலும் முன்னெடுத்துச் செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது





# ஆப்கானிஸ்தானில் தற்கொலை குண்டுத் தாக்குதல்; பலர் பலி!

ஆப்கானிஸ்தான் - காபூல் அருகே நேற்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் பலர் பலியாகினர்.

சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச அலுவலகங்களை இலக்கு வைத்து இந்த தற்கொலை குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், தற்கொலைக் குண்டு தாக்குதல்தாரியும் அந்த நாட்டு பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டார்.

இது ஆப்கானிஸ்தானில் இந்த வாரம் நடந்த இரண்டாவது குண்டுவெடிப்பு சம்பவமாகும். சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆப்கானிஸ் தான் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

# உக்ரைன் போர் தொடர்பில் மும்முனை பேச்சு நடத்தப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

உக்ரைன் போர் தொடர்பாக மும்முனை பேச்சு வார்த்தை நடத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முனிச்சில் இன்று நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்க, ரஷ்ய மற்றும் உக்ரைனிய அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வருவது என்பது குறித்து இதன் போது பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.







# நவீன போர் விமானங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்கா இணக்கம்

இந்தியாவிற்கு நவீன போர் விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட் ரம்ப் விருப்பம் தெரிவித்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்தின் போது இவ்விடயம் தொடர்பான ஒப்பங்கள் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

டொனால்ட் டிரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், வெள்ளை மாளிகைக்குச் செல்லும் நான்காவது உலகத் தலைவர் இந்தியப் பிரதமர் ஆவார்.

இதன்போது ,பிரதமர் மோடி தனது சிறப்பு நண்பர் என்று கூறிய ட்ரம்ப், அவர் தன்னை விட மிகச் சிறந்த பேச்சாளர் எனவும், வளர்ந்து வரும் சீனாவை எதிர்கொள்ளும் போது, ஒத்த எண்ணங்களைக் கொண்ட நட்பு நாடாக இந்தியாவைப் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அமெரிக்காவின் உயர் மட்ட இராணுவ பரிசுகளில் ஒன்றான எப்-35 என்ற போர் விமானத்தை இந்தியாவிற்கு விற்பனை செய்ய தயாராக இருப்பதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 14/02/2025

## பொலிஸ் மீது கத்திக்குத்து

கனடாவின் டொரன்டோவில் போலீஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்ப 02



# அலுமினிய பொருள்கள் மீது வரி அமெரிக்காவுக்கு கனடா எச்சரிக்கை

**கனடாவின் இரும்பு மற்றும் அலுமினிய பொருள்கள் மீதான வரி விதிப்பால் அமெரிக்கா வேலை இழப்பை சந்திக்கநேரிடும் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எச்சரித்துள்ளார்.**

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரி விதிப்பு மற்றும் அறிவிப்புகளால் கனடா மற்றும் அமெரிக்க ஆகிய நாடுகளுக்கு இடையேயான அரசியல் களம் உலகம் முழுவதும் பேசுபொருளாகி வருகிறது. இதனால் இவ்விரு நாடுகளுக்கு இடையே வர்த்தகப் போர் நிலவலாம் எனக் கணிக்கப்படுகிறது.**

ஏற்கெனவே, கனடாவில் உள்நாட்டு அரசியல் சிக்கலில் உள்ள நிலையில், அமெரிக்காவின் அடுத்தடுத்த அறிவிப்புகள் அந்நாட்டுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீத வரியும், சீனாவில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு கூடுதலாக 10 சதவீத வரியும் விதிக்கப்பட்டது.

ஆனால், கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், இந்த வரி விவகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில், சீனாவில் இது தொடர்கிறது.

இந்த நிலையில், அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அலுமினியத்திற்கு கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் கூறியுள்ளார். இது, கனடாவுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், கனடாவின் இரும்பு மற்றும் அலுமினிய பொருள்கள் மீதான வரி விதிப்பால் அமெரிக்கா வேலை இழப்பை சந்திக்க நேரிடும் என கனடா பிரதம ஜஸ்டின் ட்ரூடோ எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூடோ மேலும் குறிப்பிடுகையில்,

”கனடா பொருள்களுக்கு அமெரிக்கா அதிக வரிகளை விதித்தால், அதே அளவிற்கான வரிவிதிப்பை அமெரிக்க பொருள்கள் மீதும் விதிக்கப்படும். ட்ரம்ப் தனது முதலாவது ஆட்சிக் காலத்தில் கனடா பொருள்கள் மீது அதிக வரிவிதித்ததால் அமெரிக்காவில் சுமார் 75 ஆயிரம் பேர் வேலையை இழந்தனர். ட்ரம்ப்பின் தற்போதைய முடிவும் அமெரிக்காவின் வளர்ச்சி மற்றும் வளத்தை இழக்க நேரிடும்.” என்று எச்சரித்துள்ளார்.

# அமெரிக்காவை தவிர்க்கும் கனேடிய சுற்றுலா பயணிகள்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரிவிதிப்பு மிரட்டல்களை, கனேடிய அரசியல்வாதிகளை விட பாதிப்பான விடயமாக கனேடிய மக்கள் எடுத்துக்கொண்டுள்ளனர்.

கனடா மீது கூடுதலாக 25 சதவிகித வரிகள், கனேடிய கார்கள் மீது 100 சதவிகித வரிகள் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டிக்கொண்டே இருக்கிறார்.

பதிலடி நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக தெரிவித்தும், கனேடிய அரசு வரிகள் தொடர்பில் முழுமையான முடிவு எடுத்ததுபோல் தெரியவில்லை.

ஆனால், மக்கள் அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கத் தயாராகிவிட்டார்கள்.

கனடா மீது அமெரிக்கா வரிகள் விதிக்கும் விடயம், நீண்ட நாள் நண்பனுக்கு துரோகம் செய்யும், அவமதிக்கும் விடயம் என ஏற்கனவே கனேடிய மக்கள் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

அவர்கள் தங்கள் அதிரடி நடவடிக்கையை 03




# கனடா மீது விதிக்கப்படும் வரிகள் அமெரிக்கர்களைத்தான் பாதிக்கும்!

## ஜனநாயக கட்சியினர் எச்சரிக்கை

கனடா மற்றும் மெக்சிகோ மீது கடுமையான வரிகள் விதிக்கப்படுவதால், அமெரிக்கர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என ஜனநாயக கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடா மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவிகித வரி விதிப்பதாக கூறியுள்ள விடயம் இரு நாடுகளிலும் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

இந்நிலையில், கனடா மற்றும் மெக்சிகோ மீது வரிகள் விதிக்கப்படுவதால், அமெரிக்கர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என ஜோ பைடன் சார்ந்த ஜனநாயக கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இது குறித்து அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், அமெரிக்கா கட்டுமானப்பணிகளுக்குத் தேவையான பல பில்லியன் டொலர்கள் மதிப்புடைய மரக்கட்டை மற்றும் சிமெண்ட் முதலான பல முக்கிய பொருள்களை கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து ஆண்டுதோறும் இறக்குமதி செய்கிறது எனவும், ஏற்கனவே அமெரிக்காவில் சுமார் 6 மில்லியன் அளவுக்கு வீடுகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது எனவும், கட்டுமானப்பணிக்கான செலவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது எனவும் அத்தியாவசிய பொருள்கள் தொடர்ச்சியாக கிடைப்பதில் பிரச்சினை காணப்படுகிறது எனவும் இப்படிப்பட்ட சூழலில் இப்படி வரி விதித்தால், அது அமெரிக்காவில் வீடுகளை நிர்மாணிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், ட்ரம்ப் கூறுவதுபோல கனடா மற்றும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டால், சீனாவையும் சேர்த்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கட்டுமானப் பொருள்களின் விலை சுமார் 4 பில்லியன் டொலர்கள் வரை உயர்வடையும் எனவும், அது நுகர்வோர் தலையில் இறங்க, வீடுகள் விலை அதிகரிக்கும் எனவும், புதிதாக வீடுகள் கட்டுவது குறைவடையும் எனவும், அமெரிக்கக் குடும்பங்கள் மீது கூடுதல் சுமையாக அது அமையும் எனவும் ஜனநாயக கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் நோர்த் யோர்க்கின் பர்த் ட்ரஸ்ட் மற்றும் லோரன்ஸ் வீதிகளுக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபரும் காயம் அடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், இந்த சம்பவ சம்பவம் எவ்வாறு இடம் பெற்றது என்பது பற்றிய விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒரு வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

24 மணித்தியால காலப்பகுதியில் மூன்று வெவ்வேறு சம்பவங்களில் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# மிஸிஸாகாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



மிஸிஸாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மிஸிஸாகாவின் 410 ஆம் இலக்க அதிவேக நெடுஞ் சாலையில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் 52 வயதான நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

சில வாகனங்கள் மோதிக் கொண்டன எனவும் இதில் பாதிக்கப்பட்ட நபர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்திற்கு முன்னதாக மேற்படி நபருக்கு நோய் நிலைமைகள் ஏற்பட்டதா என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தினால் உயிரிழந்த நபருக்கு காயங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என உயிர்காப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

# எள்ளி நகையாடும் வகையில் சீனா செயற்பட வேண்டாம்

## ஒன்றாறியோ மாகாண முதல்வர் தெரிவிப்பு



சீனா எள்ளி நகையாடக்கூடிய வகையில் செயல்பட வேண்டாம் என ஒன்றாறியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வர்த்தகப் போர் தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு இதைவிட சிறந்த பரிசு ஒன்றை எவராலும் வழங்க முடியாது என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகரீதியில் ஏற்பட்டுள்ள முரண் பாட்டு நிலைமையானது உலக நாடு கள் எள்ளி நகையாடக்கூடிய வகை யில் அமையப்பெற்றுள்ளது என அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக பேரவையில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் கனடாவுக்கும் இடையில் தற்பொழுது நிலவி வரும் முரண்பாட்டு நிலைமைகளை உலக நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஏற்றுமதி பொருள் கள் கனடாவின் ஏற்றுமதி பொருள்கள் மீது 25 வீத வரி அறவீடு செய்யப்பட வேண்டும் என அண்மை யில் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.மேலும், உருக்கு மற்றும் அலுமி னிய ஏற்றுமதிகளுக்கு 25 வீத வரி விதிப்பதாக அண்மையில் குறிப்பிட்டி ருந்தார்.

இதனால், இரு நாடுகளுக்கும் இடை யிலான வர்த்தக உறவுகளில் பெரும் விரிசல் நிலை உருவாகியுள்ளது.

அமெரிக்காவும் கனடாவும் நீண்ட கால நண்பர்கள் எனவும் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு ஏற் படக்கூடிய மெய்யான ஆபத்துக்களை கவனித்து வர்த்தக உறவுகளை மேம் படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

தேவையற்ற வகையில் வர்த்தக ரீதியிலான முரண்பாடுகளை ஏற் படுத்திக் கொள்வது எவருக்கும் நன் மையை உண்டு பண்ணாது என அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவங்கிவிட்டனர் என தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்ல முன்பதிவு செய்திருந்தோர் பலர் அதை ரத்துசெய்து வருவதாக கனேடிய ட்ரா வல் ஏஜண்டுகள் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவுக்கு பதிலாக, வேறு நாடுகளுக்கு சுற்றுலா செல்ல முடிவு செய்ததன் மூலம் தங்கள் நாட்டுப் பற்றை வெளிப்படுத்திவருகிறார்கள் கனேடிய மக்கள்.

அமெரிக்காவின் பிரபல சுற்றுலாத் தலங்களான, Palm Springs, Orlando மற்றும் Phoenix ஆகிய இடங்களுக்கு சுற்றுலா செல்லும் சர்வதேச சுற்றுலாப்பயணிக ளில் முதலிடம் வகிப்பவர்கள் கனேடி யர்கள்தான்.

ஆக, இம்முறை அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்வதை தவிர்க்க கனேடிய மக்கள் முடிவு செய்துள்ளதால், அந்த சுற்றுலாத்தலங்கள் கடுமையாக பாதிக் கப்பட இருக்கின்றன என்கிறார்கள் ட்ராவல் ஏஜண்டுகள்.



கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்பவர்களில் 10 சதவிகிதம் குறைந்தாலே, அமெரிக்காவுக்கு சுமார் 2.1 பில்லியன் டொலர்கள் இழப்பும், 14,000 அமெரிக்கர்களுக்கு வேலை இழப்பும் ஏற்படும் என்கிறது அமெரிக்க பயண கூட்டமைப்பு.

2024 ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக் காவுக்கு அதிகம் சுற்றுலா சென்றவர் கள் கனேடியர்கள்தான். 20.4 மில்லியன் கனேடியர்கள் அமெரிக்காவுக்கு சுற் றுலா சென்றதால், அமெரிக்காவுக்கு 20.5 பில்லியன் டொலர்கள் வருவாய் கிடைத்துள்ளதுடன், 140,000 அமெரிக் கர்களுக்கு வேலை வாய்ப்பையும் அது உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.